# DAD'S ARE ALWAYS LIAR’S

**By Pramila**

## Chapter 1

அன்று அந்திமாலை 6.00 மணி. அலுவலகம் முடிந்து வீடு திரும்பும் வேளை , மனமானது சற்று ஓய்வுக்காக ஏங்கிக் கொண்டு இருந்தது. எனது அலுவலகப் பணிகளை முடித்துவிட்டு வீடு திரும்பும் எண்ணத்தில் எனது பையை எடுத்தேன், பின்னிருந்து ஒரு குரல் " அசோக் இரு " நான் திரும்பிப் பார்க்க என்னோடு பணிபுரியும் கதிர் அங்கு நின்றுகொண்டு இருந்தான். "அசோக், சார் உன்னை கூப்பிட்டார் " என்றான். நான் சார் அறையின் கதவை தட்டி, " மே ஐ கம், சார் " என்றேன். அவர் " அசோக் நான் உங்களிடம் கொடுத்த வேலை என்னாச்சி ? " என்றார். அதற்கு நான் " முடிந்தது சார் " என சில காகிதங்களை அவர் முன் நீட்டினேன். அப்பொழுதும் அவர் என்னை விடுவதாக இல்லை. சார் கூரிய வேலைகளை முடிக்கும் போது மணி 8.00 , வீடு சென்று சேரும் போது மணி 8.30. வீட்டிற்கு சென்று கதவை தட்டினேன் , எனது மனைவி தனு கதவை திறந்தாள். ஆனால் இன்று வழக்கத்திற்கு மாறாக அவளது முகம் இருந்தது. வருத்தத்தோடு கலந்த கோபமும் அவள் முகத்தில் தெரிந்தது.

ம்ம் நான் என் குடும்பத்தைப் பற்றி இன்னும் சொல்லவில்லையே, எனது குடும்பம் ஒரு குட்டிக் குருவிக் கூடு அதில் நான், தனு , என் அப்பா விக்ரம், என் தம்பி கிருஷ்ணா , எனது குட்டி இளவரசி மகா என எப்பொழுதும் ஐந்து சிட்டுக் குருவிகள் தன் சிறகுகளை அடித்துக் கொண்டிருக்கும். சின்னதாக இருந்தாலும்கூட இந்த கூட்டில் ஆரவாரத்திற்கு குறைவு இல்லை. இங்கு சண்டைகளும் உண்டு சமாதானமும் உண்டு. என்ன ? இல்லை, அப்படி நினைக்காதீங்க!! தான் தனு கூட சண்டை போடுறதா வாய்ப்பே இல்லை. சரி விடுங்க ஒத்துக் கொள்கிறேன் 😅 சின்ன சின்ன சண்டை வரும் ஆனால் ஒரு மணி நேரம் கூட இருக்காது. அப்படியே இருந்தாலும்கூட சமாதானப்படுத்த எங்கள் குடும்பத்தில் ஒருத்தர் இருக்காரே ... யாரு அப்படினுதான கேட்கிறீங்க வேறு யாரு என் அப்பா தான். என் அப்பா ஒரு சமாதான புறா சண்டைகளை தீர்ப்பது தான் அவர் வேலை , அதுவும் அம்மா எங்களை விட்டு சென்ற பிறகு அதுவே அவர் முழு நேர வேலையாக மாறி விட்டது.

அடுத்து என் அன்பு மனைவி தனு,, தனு பற்றி என்ன சொல்வது ,, எங்கள் திருமணம் காதல் திருமணம் இல்லை, ஆனால் நான் தனுவை காதலிக்காத நாளும் இல்லை. தனுவும் அப்படித் தான். ஆனால் அவளிடம் பிடிக்காதது ஒன்று உள்ளது. ( ஆனால் இதை அவளிடம் சொல்லாதீங்க 😅) அது என்னவெனில் தனுவுக்கு என்னை விட என் குடும்பத்தை தான் பிடிக்கும். இப்பொழுது உங்களுக்கு புரிந்ததா எனக்கு ஏன் தனுவை பிடிக்கும் என்று ..

அவள் கிடைத்தது என் அதிர்ஷ்டம்.

அடுத்து என் தம்பி கிருஷ்ணா ..

நாங்க வழக்கமான அண்ணன் தம்பி தான் ஆனால் கிருஷ்ணாவை அனைவருக்கும் பிடிக்கும் ( ஆனால் எனக்கு இல்லை, எனக்கு அவனை ரொம்ப

ரொம்ப பிடிக்கும், நீங்க கிருஷ்ணா விடம் இதை சொல்லமாட்டீங்கனு நம்பறேன்.
) கிருஷ்ணா இப்பொழுது தான் கல்லூரியில் படிக்கிறான். ஆனால் உங்களுக்கு தெரியுமா கிருஷ்ணாக்கும் எனக்கும் உரையாடல் அதிகமாக கண்களில் தான் நடக்கும்.
அடுத்தது மகா , அவள் எங்க வீட்டு குட்டி இளவரசி .....
ஆனால் தனு முகம் வாடக் காரணம் என்னவாக இருக்கும் ? என யோசித்தவாறே உள்ளே நுழைய நான் எண்ணியபடியே நடந்திருந்தது.
வீட்டின் உள் பெரும் அமைதி .....
நான் உள்ளே நுழைய , அப்பா என்னைப் பார்த்தார் " என்னால் முடியாது என்னை விட்டுவிடு " என்று கூறியவாறு தனது அறைக்கு சென்று விட்டார்.
ஜன்னல் அருகே நின்று கொண்டு செல்போனில் பேசிய படியே கிருஷ்ணா என்னைப் பார்த்தான் , பிறகு என்னை நோக்கி ஒரு புன்னகையை வீசினான்.
அதற்கு அர்த்தம் எனக்கு தெரியும். ' இன்று நீ என்ன செய்கிறாய் என்று நானும் பார்க்கிறேன் , ' என்பது தான் அதன் அர்த்தம். பின் நான் திரும்பி எனது மனைவி தனுவை பார்க்க , அவள் என்னிடம் " என்னை எதற்கு பார்க்கிறீங்க , இந்த முறை நான் கண்டிப்பா மன்னிப்பு கேட்க மாட்டேன். நீங்க என்ன சொன்னாலும் சரி " என்று சொல்லி விட்டு அவளும் அறைக்கு சென்று விட்டாள்.
இப்பொழுது உங்களுக்கே பிரச்சனை என்னவென்று புரிந்திருக்கும். தனு எப்பொழுதும் என்னிடம், " எனக்கு என் மாமியார் அம்மா மாதிரி , அதனால் எனக்கு மாமியார கடவுள் மகளா அனுப்பி இருக்காரு " என்று சொல்வாள். என் மகள் மகாவும், எனது மனைவி தனுவும் எப்பொழுதும் எலியும் பூனையும் தான்.
😅நீங்க ஒன்னும் கவலைப்படாதீங்க இது எப்போதும் நடப்பதுதான் ...
********

To be continued

அட .... இருங்க உங்க குடும்பத்திலும் இது மாதிரி சண்டைகள் வருமா ? அப்படி வந்தால் யாருக்கு இடையில் வரும் ... இதேபோல் இருவருக்கிடையில் நீங்களும் மாட்டிக்கொண்டு விழித்து இருக்கிறீர்களா.... review வில் சொல்லிட்டு போங்க

# Chapter 2

இப்போது நான் என் மகளை தேட , அவள் எங்கள் வீட்டு டைனிங் டேபிள் மேல் அமர்ந்து , தன் தலையை கீழே சாய்த்து , கன்னத்தில் கையை வைத்து , கண்களில் கண்ணீரோடு என்னை பார்த்தாள் 😕😭 . சண்டைக்கு என்ன காரணம் என்று தெரிந்து கொள்ளும் ஆர்வம் எனக்கு இல்லை.. ஏனெனில் இது வழக்கமாக நடப்பதே.. அப்படியே காரணம் இருந்தாலும் அதில் உப்பு காரம் எதுவும் இருக்காது 😜 .
நான் என் மகள் அருகே சென்று " என் மகா குட்டிக்கு என்னாச்சு ? " என்று கேட்டேன். அவள் என்னை பார்த்து " அப்பா நான் எது செய்தாலும் அதை அம்மா தப்புன்னு சொல்றாங்க , என்னை திட்டிக்கிட்டே இருக்காங்க ," என்று சொல்லிவிட்டு மீண்டும் தலையை குனிந்து கொண்டாள்.
இப்பொழுது கிருஷ்ணாவும் எங்களோடு வந்து அமர்ந்தான். அவன் " ஓ மை பட்டர்ஃபிலை , இங்க பாரு இதுக்கெல்லாம் யாராவது அழுவாங்களா இங்க பாரு இப்ப நான் உங்களுக்கு ஒரு மேஜிக் காட்ட போறேன்🥳💫 " என்றான். மேலும் தனக்கு தெரிந்த சிலவற்றை செய்தும் காட்டினான்🎉 இருந்தும் பயனில்லை , இன்னும் இளவரசியின் அழுகை நிற்கவில்லை.😶
இப்பொழுது நான் தான் ஏதாவது செய்ய வேண்டும். கிருஷ்ணா தன் முயற்சிக்கு பிறகு என்னை பார்க்கிறான் . இப்பொழுதும் அந்த பார்வைக்கு அதே அர்த்தம் தான். ஆனால் இம்முறை அவன் முகத்தில் சிரிப்பு இல்லை. இம்முறை என்ன பொய்க்கதை😅 என்ற ஆர்வம் தான் இருந்தது . நான் என் மகளை பார்த்தேன் ..... 'ஓ ஓ ஓ மகா குட்டி நிமிர்ந்து உட்காருங்க ' அவளிடமிருந்து பதில் இல்லை. நான் மீண்டும் ' ஓஓஓஓ குட்டி ' இம்முறை நானே அவள் தலையை நிமிர்த்தி என்னை பார்க்கும் படி செய்தேன் , மகா என்னிடம் " என்னப்பா "என்று சலித்துக்கொண்டாள். " குட்டி நிமிர்ந்து உட்காருங்கள், இல்லேன்னா " என்று இடையில் நிறுத்தினேன் . அவள் , " இல்லைன்னா என்ன ? சொல்லுங்கப்பா " என்றாள் . நான் " மகா குட்டி இல்லைனா .... உன்னோட கிரீடம் கீழே விழுந்திடும் டா😉😋 " என்றேன்.
அவள் ஆர்வமாக அவளின் தலையை தடவி கிரீடத்தை தேடுகிறாள்👸 . ஆனால் அவளுக்கு கிடைத்தது ஏமாற்றம் தான்😕 . அவர் மீண்டும் கோபமாக , " போங்கப்பா நீங்க பொய் சொல்றீங்க " என்றாள்.
" மகா, அப்பா உன்னிடம் பொய் சொல்வேனா ?" இம்முறை பதில் மகளிடம் இல்லை . ஆனால் கிருஷ்ணா தன் மனதினுள் ( நீங்க எப்பவும் போய் தான் சொல்றீங்க 🤭🙃 பாவம் அவளுக்கு தான் அது தெரியவில்லை😕 ) சிறு புன்னகையோடு. அப்படி என்றால் கிரீடம் எங்கே ?" என்றாள் . கிருஷ்ணா மனதினுள் ( ஆஹா சபாஷ் சரியான கேள்வி 😁😉 ) நான் மகாவிடம் " மகா குட்டி அதை நான் உன்னிடம் எப்படி கூறுவது " கிருஷ்ணா ( வாயில் தான் 🤪 ) நான் , " அது ஒரு சின்ன கதை தான் , ஆனால் பெரிய ரகசியம் 🤭 " . இப்பொழுது அவள் கண்ணீர் நின்று அவளது கவனம் எனது வார்த்தைகளில் இருந்தது . இதைத்தான் நானும் எதிர்பார்த்தேன்🙂. மகா ஆவலுடன் " என்ன ரகசியம் அது ? " என்றாள். நான் " நீ பிறந்த போது நடந்த விஷயம் அது, அப்ப நீ குழந்தை , அதனால் உனக்கு தெரியாது. " எனக்கூறி, நான் சற்று அமைதியாக , " என்னப்பா சொல்லுங்க ஏன் நிறுத்திட்டீங்க ?" ஆவலின் கூச்சத்தில் மகாவும் கிருஷ்ணாவும். " சரி சொல்வேன், ஆனால் இதை யாரிடமும் சொல்லக் கூடாது , ஏனெனில் இது ரகசியம் " நான் உண்மையில் என்ன சொல்வது என்று தெரியாமல் நேரத்தை கடத்திக் கொண்டு இருந்தேன்😅😉😅🙃.

" ஓகே சொல்ல மாட்டேன் . நீங்க சொல்லுங்க". நான் இந்த வாய்ப்பை பயன்படுத்தி, ஆனால் அதற்கு முன்னால் நீ சாப்பிட வேண்டும் " என்றேன். மகாவும் " ஓகே அப்பா ஆனால், நீங்கள் தான் ஊட்ட வேண்டும் " புன்னகையுடன் 🙂. கிருஷ்ணா வாய்ப்பை பயன்படுத்தி, " பட்டர்பிளை அம்மாவும் சாப்பிடவில்லை , அம்மாவை போய் கூப்பிடுங்க " என்று சொன்னவாறு இரண்டு இட்லியை என்னிடம் நீட்டினான். மகா " போங்க சித்தப்பா நீங்க எப்பவும் அம்மாவுக்கு தான் சப்போர்ட்🤨😠😡 " என்றாள். நான் என் பங்குக்கு " குட்டி அம்மா தானே திட்டினாங்க விடுடா " என்றேன் . அதற்கு மகா " அப்பா இப்ப நீங்க கதை சொல்லப் போறீங்களா இல்லையா ? " என்றாள் , சற்று கோபமாக😡... சரி ஆனால் குறுக்கே பேசக்கூடாது எனக் கூறி கதையை தொடங்கினேன் ..
*****************

To be continued

நமக்கு பல நேரங்களில் பலரும் கதை கூறுவது உண்டு... ஆனால் அதை எல்லாம் நாம் நம்பி விடுவதில்லை .. ஆனால் ஒரு சிலரிடம் கேட்கும் கதைகள் எப்பொழுதும் மறக்க இயலாததாகவும் இனிமையான நினைவாகவும் மாறிவிடும்... பல கதைகளை நமது தாத்தா, பாட்டி, அப்பா, அம்மா என பலரும் கூறக் கேட்டிருப்போம்.... எடுத்துக்காட்டாக ராஜா ராணி கதை, இளவரசி கதை, சில சமயங்களில் பேய்க்கதைகள் கூட 👻 , இப்படி பல கதைகள்.... 😅.. ஆனால் அந்த ஒரு நபர் கூறிய மறக்க முடியாத கதை என்று அனைவருக்கும் ஒன்று இருக்கும், அப்படி மறக்க முடியாத கதையை உங்களுக்கு கூறியது யார் review வில் சொல்லிவிட்டு போங்க

## Chapter 3

அன்று சரியாக 8 மணி. அப்பா அப்போது ஆபீஸில் இருந்தேன் , அன்னைக்கு அப்பாவுக்கு அதிகமாக வேலை இருந்தது. நான் என் வேலையை வேகமாக செய்து கொண்டு இருந்தேன். அப்போ எனக்கு ஒரு போன் வந்தது 📞 . மகா இடையில் " யார் போன் பண்ணது ? " என்றாள் . " குட்டி இப்பதானே சொன்னேன் பேச கூடாதுன்னு " " ஓகே அப்பா பேச மாட்டேன் நீங்க சொல்லுங்க " எங்க விட்டேன் ம்.... ம் போன் வந்தது .... போனை எடுத்தேன் . அப்போ உன்னோட தாத்தா தான் போன் பண்ணாரு. நான் போனை காதில் வைத்ததும் , உன் தாத்தா என்கிட்ட " தனுவை ஹாஸ்பிட்டலில் சேர்த்திருக்கிறோம். நீ சீக்கிரம் வா " என்று சொன்னார். அதன் பிறகு அப்பா வேகமாக ஹாஸ்பிடலுக்கு வந்தேனா, நான் உள்ளே வந்ததும் திடீரென ஒரு அழுகுரல், அது யார் தெரியுமா ? அது என்னோட குட்டி இளவரசி 👸 மகா தான் . ( மகா இப்பொழுது சிரிக்கிறாள் 😁😄 ).

ஆ ... ஆ... அடுத்து நான் உன்னையும் உன் அம்மாவையும் பார்க்க ஏங்கி கொண்டு இருந்தேன் 🙄 . அப்பொழுது ஒரு நர்ஸ் உன்னை கொண்டு வந்து என் கையில் கொடுத்தாங்க , ஆனால் உன் சித்தப்பா இருக்கானே 🤦‍♂️🤦‍♂️ அவன் அது என் குழந்தை என் கிட்ட குடுங்க அப்படின்னு அவன் உன்னை வாங்கிக் கொண்டான் .

( இப்பொழுது மகா கிருஷ்ணாவை பார்க்கிறாள். அவன் அவளை பார்த்து சிரிக்கிறான் 🙂. மகா பேசியது உங்களுக்கு நினைவிருக்கும் என்று நினைக்கிறேன்..... பின் மகா தன் கைகளால் காதுகளைப் பிடித்து கிருஷ்ணாவிடம் மன்னிப்பு கேட்கிறாள் 🙅‍♀️, பின் கிருஷ்ணா மடியில் சென்று அமர்கிறாள். இப்பொழுது கிருஷ்ணாவும் கதையை கேட்க காத்துக் கொண்டிருக்கிறான் 🙃. அசோக் தன்கதையை தொடர்கிறான் . )

அடுத்து உன் பாட்டி உன்னை வாங்கிக் கொண்டார் . பின் அவர் சொன்னார் , என் செல்லம் யார் கண்ணும் உன் மேல படக் கூடாது என்றார் . பின் தன் கண் மையை உன் கன்னத்தில் வைத்தார் 🙂. அடுத்து உன் தாத்தா முந்திக் கொண்டார் . மொத்தத்தில் யாரும் உன்னை என் கையில் தருவதாக இல்லை 😔😒.
ஹாம் ஓகே உன் தாத்தா என்ன சொன்னார் தெரியுமா " அடக்கடவுளே எனக்கு ஒரு பேத்தி தான் கேட்டேன் ஆனால் நீங்கள் ஒரு தேவதையை கொடுத்திருக்கீங்க" என்று சொன்னார். கடைசியாக உன்னை என்னிடத்தில் கொடுத்தார்கள் . உண்மையா சொன்னா நீ எவ்வளவு அழகா இருந்தேன்னு வார்த்தையால் சொல்லவே முடியாது நீ அப்படி இருந்த ......
அடுத்து...... ( அப்புறம் என்னாச்சு மகா ஆவலோடு )
அடுத்து என்ன நாங்க எல்லோரும் சண்டை போட்டு கொண்டு இருந்தோம் ...
"எதுக்கு? " அப்படி என்று தானே கேட்கப் போகிறாய் இரு நானே சொல்கிறேன் , எதற்கு எனில் நீ யார் என்று தான் , உன் தாத்தா சொன்னார் நீ அவரோட தேவதை என்று👰 , நான் சொன்னேன் நீ என்னோட இளவரசி என்று👸 , உன் சித்தப்பா சொன்னான் நீ அவனோட ( பட்டர்பிளை 🧚மகா சொல்கிறாள். ) அடுத்து உன் தாத்தா என்னிடம் கேட்டார் " சரி நீ உன்னோட இளவரசிக்கு என்ன பரிசு கொண்டு வந்திருக்க " அதற்கு நான் சொன்னேன் , இவளே என்னோட பெரிய பரிசு , ஆனாலும் நான் ஒரு பரிசு வைத்திருக்கிறேன் , ஒரு இளவரசிக்கு மிக முக்கியமான ஒன்று அது என்னவெனில் என்னோட இளவரசிக்கு அவளுடைய கீரிடம் தான்👑. ( ஓ... அப்பா நீங்க தான் எனக்கு அந்த கிரீடத்தை கொடுத்தீர்களா ?

ஆனால் அது இப்பொழுது எங்கே இருக்கிறது ? அப்பொழுது கிருஷ்ணா "ஓ மை பட்டர்ஃப்ளை🤦 அது தெரியணும்னா கதையை முழுவதும் கேட்கணும் " என்றான் . )
அப்பொழுது ஒரு குரல் கேட்டு நாங்கள் எல்லோரும் திரும்பி பார்த்தோம் , அது அந்த நர்ஸ் தான் அவங்க சொன்னாங்க உன்னோட அம்மாவுக்கு மயக்கம் தெளிந்து விட்டது அவங்க குழந்தையை கேட்கிறாங்க என்று சொன்னார்கள். உடனே நாங்க உன்னை உன் அம்மாவிடம் கூட்டிச் சென்றோம். உன்னை பார்த்ததும் தனுவுக்கு , அவ்வளவு சந்தோஷம் உன்னை வாங்கி தனது அருகில் வைத்துக் கொண்டாள். உன்னைப் பார்த்து ரசித்தாள். நீ சிரிப்பதை பார்த்து அவளும் சிரித்தாள் , ஆனால் நீ உன் அம்மாவை பார்த்ததும் அழத் தொடங்கிவிட்டாய் ( கிருஷ்ணா சிரிக்கிறான் 😁😆 , பின் அவன் மகாவை பார்த்து " அப்பொழுது முதல் இப்பொழுது வரை நீ உன் அம்மாவை பார்த்தால் அழுது கொண்டுதான் இருக்கிறாய் " என்றான். மூவரும் சிரித்தனர் )
இப்பொழுது மட்டும் இல்லை அப்பொழுதும் அனைவரும் இப்படித்தான் சிரித்தோம் . ஆனால் , உன்னுடைய அம்மா கண்களில் இருந்து கண்ணீர் அருவி ஊற்றியது. உனக்கு ஒரு விஷயம் சொல்கிறேன் குட்டி, இந்த உலகத்தில் எந்த ஒரு அம்மாவும் ஏன் உன்னுடைய பாட்டி கூட தான் , தன் வயிற்றில் பத்துமாதம் சுமந்து அன்பா அக்கறையா கவனமா பார்த்துகிட்ட குழந்தை முதல் முறை இவ்வுலகத்திற்கு வரும் போது, முதன்முதலில் அழும்போது அந்த குரல் கேட்டு சந்தோசத்தில் கண்டிப்பாக சிரிக்கத்தான் செய்வார்கள். அதற்குப் பிறகு குழந்தை அழும் போது எப்பொழுதும் சிரிப்பு வராது. ஆனால் அந்த முதல் முறை எல்லா அம்மாவுக்கும் சந்தோஷம் தான் இருக்கும்....
ஆனால் உன் அம்மா அப்பொழுது கூட , "அசோக் என்னுடைய இந்த குட்டி தேவதையே அழ வேணாம்னு சொல்லுங்க எனக்கு கஷ்டமா இருக்கு" என்று தான் சொன்னாள்.
இப்பொழுது யார் முகத்திலும் சிரிப்பு இல்லை

## Chapter 4

சரி குட்டி உனக்கு நம்பிக்கை இல்லை எனில் நீயே சென்று எங்கள் அறையில் பார் ...... தனு கண்களில் மட்டும் இப்பொழுது கண்ணீர் இல்லை எனில் , நான் ஒப்புக் கொள்கிறேன் , நீ சொன்னது சரிதான் , உன் அம்மா மேல் தான் தவறு

என்று , அதுமட்டுமில்லை சற்று முன்பு என்னிடம் இம்முறை நான் மன்னிப்பு கேட்க போவதில்லை என்று சொன்னாள் அல்லவா , ஆனால் அவள் நிச்சயம் உன்னிடம் மன்னிப்பு கேட்பாள் , அப்படி நடந்தால் நீ உன் அம்மாவை மன்னித்து விட வேண்டும்.மகா : சரி அப்பா அதையும் பார்க்கலாம் (மகா தனது அம்மாவின் அறைக்குள் செல்கிறாள் )

கிருஷ்ணா : என்ன அண்ணா இப்படி செய்துவிட்டீர்கள் .... இப்பொழுது மட்டும் நீங்கள் சொன்னபடி நடக்கவில்லை , எனில் பிரச்சனை இன்னும் பெரிதாகிவிடும் நீங்கதான் மாட்ட போகிறீர்கள் 🙄 🙄 ( இம்முறை அக்கறையோடு )

அசோக் : இல்லை ... இல்லை .... கிருஷ்ணா நீ நினைப்பது போல் எதுவும் நடக்காது , எனக்கு தனுவைப் பற்றியும் தெரியும் , மகாவை பற்றியும் தெரியும் நான் நிச்சயமாக சொல்வேன் இருவரும் சேர்ந்துதான் வருவார்கள் பார் ....
கிருஷ்ணா : ஆமா ... ஆமா ... உங்களுக்கு என்னதான் தெரியாது 🧐 , சொல்லுங்க அவங்க இரண்டு பேர் பற்றியும் தெரியும் , என்னை பற்றியும் தெரியும் , இந்த உலகத்தில் இருக்கும் அனைவரைப் பற்றியும் தெரியும் . ஆனால் அண்ணா உங்களுக்கு பிரச்சனை என்ன என்பது தெரியாதே ...... ( இம்முறை வழக்கமான கிண்டல் பேச்சு 😉😛 😋 😝 🤪 ஆனால் அது அசோக்கிற்கு பழகிப்போன ஒன்று தான் )
ஆஹா மகாவை மறந்து விட்டோமே 😅 .... சரி
மகா அறைக்கு செல்கிறாள் . அப்பொழுது தனு தனது அறையில் படுத்துக்கொண்டு இருப்பதை பார்க்கிறாள். இன்னும் அருகில் மகா செல்ல தனு கையில் ஏதோ இருப்பதை பார்க்கிறாள். வேறு என்னவாக இருக்க முடியும் , அது மகாவின் போட்டோ தான் குழந்தையாக இருக்கும் போது எடுத்தது .
மகா ( நேரில் எப்பொழுதும் என்னை திட்டுவது பிறகு அறைக்கு வந்து போட்டோவோடு பேசுவது .... என மனதில் எண்ணியவாறு அந்த போட்டோவை எடுக்க முயற்சிக்கும் போது தனு விழித்துக் கொள்கின்றாள் தனு கண்கள் நன்றாக சிவந்து இருப்பது அசோக்கின் வார்த்தைகள் உண்மை என காண்பித்தது.... )
மகா : அம்மா....
அவ்வளவு தான் அந்த ஒரு வார்த்தை தான் .. இவ்வளவு நேரமும் மகா முன் நடித்துக் கொண்டே இருந்த கண்கள் உண்மை பேச தொடங்கின... ( அட கண்ணீரைத் தான் அப்படிக் கூறினேன் 😥 )
தனு : மகா குட்டி அம்மா செய்தது தவறு தான். ( தவறு இல்லாத போதும் ) அம்மா உன்னை அப்படி திட்டி இருக்கக்கூடாது . அம்மாவை மன்னித்து விடு ( எனச்சொல்லி விட்டு அழத் தொடங்கினாள் )
( அசோக்கின் வார்த்தைகள் அனைத்தும் உண்மையாகி விட்டது ..... இதற்கு மேல் மகாவினால் என்ன என்ன பேச முடியும் சொல்லுங்கள் என்ன இருந்தாலும் தாய் பாசம் எப்போதும் மாறாதது அல்லவா .... அது எப்போதும் பாரபட்சம் காட்டாது .... அப்படித் தான் தனுவும் ..... இப்பொழுது மகா ஓடிச் சென்று தனது தாயை கட்டி அணைத்து முத்த மழையை 🤱💁 பொழிகிறாள் .... அதில் தனு முழுவதும் நனைந்தே விட்டாள் 🙃 🙃 😜 😜 . )
( அடடா ..... மகாவைப் பற்றி சொல்ல மறந்து விட்டேனே ... மகா விடம் உள்ள பிரச்சனை சண்டை போடுவது மட்டுமல்ல , அவள் தனது அம்மாவை பெயர் சொல்லித் தான் அழைப்பாள் . பலரும் பல முறை சொல்லியும் மகா ஏற்பதாக

இல்லை . எல்லாம் தனு கொடுக்கும் இடம் தான் ..... தனுவுக்கு யாரும் மகாவை எதுவும் சொல்லக் கூடாது . அந்த உரிமை அப்பாவாகிய எனக்கும் கிடையாது 😅 😁 . அப்புறம் எப்படி சண்டை ? அப்படி தானே யோசிக்கிறீங்க .... அதெல்லாம் அப்படித் தான் முடிந்ததை பற்றி எதற்கு பேச வேண்டும்.... விடுங்க விடுங்க . ஒரு வழியாக அவங்க இருவருக்கும் இடையே இருந்த பிரச்சனை முடிந்தது 😀 ஆனால் இனி பிரச்சனை எனக்குத் தான் எப்படி சமாளிக்கப் போகிறேனோ 😅 🙃 🙄 )
மகா : வா , தனு போய் சாப்பிடலாம் ....
( இருவரும் மாடியில் இருந்து கீழே இறங்கி வருவதை பார்த்த , கிருஷ்ணாவிற்கு ஒரே ஆச்சரியம் தான் ... ஆனால் அதை வெளிக் காட்டவில்லை ... அண்ணன் வார்த்தைகளில் கிருஷ்ணாவுக்கு எப்பொழுதும் நம்பிக்கை அதிகம் ... ஆனால் அதை எப்பொழுதும் வெளியில் சொன்னது இல்லை 🤭 🤭 🤫 )
(மகா தன் கைகளால் தன் அம்மாவிற்கு உணவை தருகிறாள். இப்பொழுது இங்கு அன்பும் பரிமாறப்படுகிறது. )
( கிருஷ்ணா மகாவிற்கு ஜாடை 😉காட்டுகிறான் . அதை அசோக் கவனித்தும் கவனிக்காதது போல் இருக்கிறான் . ஆனால் மகா விடுவதாக இல்லை 🙃 😉 .
)மகா : அப்பா நீங்க சொன்ன கதையில் கிரீடம் எங்கே போனது என்று சொல்லவே இல்லையே ....

அசோக் : அது வந்து.... அது வந்து மகா.... அதை நீ உன் சித்தப்பாவை தான் கேட்க வேண்டும் .... 😜 😉

மகா : சித்தப்பா சொல்லுங்க எங்கே அந்த கிரீடம் .... ( முகத்தை பாவமாக வைத்துக்கொண்டு ) 😕 😕

கிருஷ்ணா : ( ஐயோ அண்ணா ..... நேரம் பார்த்து என்னை மாட்டி விட்டு விட்டாரே ... என்ன செய்வது 😐 என்று தெரியாமல் அசோக்கை முறைக்கிறான் 🤨 🤨 )

அசோக் : சரி விடு ... நானே சொல்கிறேன் ... , ஏன் என்று எனக்கு தெரியாது ஆனால் உன்னோடய இந்த சித்தப்பா அவனுடைய மேஜிக் மூலமாக , அந்த கிரீடத்தை மறைய வைத்து விட்டான் ....

மகா ( கோபமாக 😡 ) : சித்தப்பா .... ஏன் இப்படி செய்தீர்கள் ?

( மீண்டும் கிருஷ்ணா பதில் தெரியாமல் விழிக்க 🙄 மகா தொடர்கிறாள் . )

மகா : அந்த கிரீடம் எங்கே சொல்லுங்கள் சித்தப்பா ...

அசோக் : மகா குட்டி , அப்பா என்ன சொன்னேன் உன்னிடம் , கிருஷ்ணா அந்த கிரீடத்தை மறைய வைத்தான் என்று தானே சொன்னேன் , மறைத்து வைத்தான் என்றா சொன்னேன் ....
மகா : அப்படி என்றால் ? இதற்கு என்ன அர்த்தம் 🤔 🤔 அப்பா ....
அசோக் : அப்படி என்றால் .... அந்த கிரீடம் உன்னுடைய தலையில் தான் உள்ளது 😜🙃 .மகா குட்டி ...

மகா : ( மீண்டும் தலையை தடவி விட்டு ) அப்பா ...
அசோக் : மகா குட்டி , அப்பா சொன்னால் நம்ப மாட்டாயா...
மகா : சரியப்பா நம்புகிறேன். ஆனால் , .... இப்பொழுது தாங்கள் தானே சொன்னீர்கள் ... கிரீடம் கீழே விழுந்து விடும் என்று .... அப்படியென்றால் நான் கீழே குனிந்தால் அது விழுந்து விடுமே .... அப்பொழுது என்ன செய்வது அப்பா .... 🤥 😕
அசோக் : அது .... 😅 🙄 அது .. 😬 😬 🙄அப்படியெல்லாம் விழாது கவலைப் பட தேவையில்லை . உன் சித்தப்பா இருக்கிறானே அவன் வழக்கம் போல் செதப்பி விட்டான் . ஆனால் மகா குட்டி அது மேஜிக் 😜 🤭 நீ அழும் போது மட்டும் தான் அது கீழே விழும் . ஆனால் அது கீழே விழுந்தால் நம்மால் கண்டு பிடிக்க முடியாது . அதன் பிறகு நீ உன் அப்பா தந்த பரிசை தொலைத்து விடுவாய் . பிறகு அது உனக்கு கிடைக்க வாய்ப்பு இல்லை . இப்பொழுது நீ தான் சொல்ல வேண்டும் மகா குட்டி இனி நீங்க ...
மகா : எப்பவும் இனி அழவே மாட்டேன் அப்பா .... 🙂 ஆனால் சித்தப்பா நீங்கள் ஏன் இப்படி செய்தீர்கள் .... 🤨 😕அப்பாவின் பரிசை என்னால் பார்க்கவே முடியவில்லை 😓 😞 ....
கிருஷ்ணா : ( அப்படி ஒன்று இருந்தால் தானே குட்டி பார்க்க முடியும் )
அசோக் : அதற்கும் ஒரு காரணம் இருக்கு மகா குட்டி ....
மகா : காரணமா ..... அது என்ன காரணம் ? 🤔 🤔 அப்பா ..
அசோக் : மகா குட்டி நீ எங்கள் இளவரசி ... ஆனால் இது மற்றவர்களுக்கு தெரியாதே ..
மகா : ஆமாம் அப்பா ... ஆனால் அதற்கு என்ன ..? மற்றவர்களுக்குத் தெரிந்தால் என்ன ஆகும் .... 🤔
அசோக் : எதுவும் ஆகாது மகா குட்டி ..... ஆனால் குட்டி அப்படி தெரிந்தால் உன்னோட நண்பர்கள் தாங்கள் இளவரசி இல்லை என்று வருத்தப்படுவார்கள் அல்லவா ...... 😅 அதுவும் இல்லாமல் நீ இளவரசி என்பது நமக்கு மட்டுமே தெரிந்த ரகசியம் .... 😉 🙃 நீ இதை யாரிடமும் சொல்ல மாட்டேன் என்று சத்தியம் செய்து இருக்கிறாய் அல்லவா ...
மகா : ஆமாம் ... ஆமாம் ... அப்பா நான் யாரிடமும் சொல்ல மாட்டேன். என் நண்பர்கள் யாரும் வருத்தப்பட கூடாது ... 🙂 அப்பா
அசோக் : என் செல்லம் 😀 ( தப்பித்தோம் என்ற மனநிலையில் 🤪 🙃 😅 )
( சிறிது அமைதிக்குப் பிறகு )
மகா : ஆனால் சித்தப்பா நான் உங்ககிட்ட பேச மாட்டேன் போங்க .... வா தனு போய் தூங்கலாம் .... ( இருவரும் தூங்கச் செல்கின்றனர் )
கிருஷ்ணா : மகா ... மகா ... குட்டி நில்லுடா..
( இப்பொழுது அசோக் முகத்தில் அந்த கேலிச் சிரிப்பு 😆 🤣 )
கிருஷ்ணா : இப்பொழுது உங்களுக்கு சந்தோஷம்தானே ....🤨
அசோக் : ம்ம்ம்..... மிக்க மகிழ்ச்சி 😄😃😀
( இந்த உலகம் இப்படித்தான் கிருஷ்ணா பொய் சொல்பவர்களை நம்பும் . ஆனால் ... உண்மைக்கு காலமே இல்லை என தன்னைத்தானே நொந்து கொள்கிறான் 😔 🤦‍♂️ )கிருஷ்ணா : எவ்வளவு பொய் .... மகா பிறந்த போது நீங்கள் ஊரிலேயே இல்லை . அதற்குள் எவ்வளவு பொய் சொல்கிறீர்கள் .... பாவம் அந்த சின்ன பொண்ணு , நீங்க சொன்னதெல்லாம் உண்மை என்று நம்பி என் மீது கோபமாக

செல்கிறாள் . இதில் சத்தியம் வேறு ... அப்பொழுது தானே அவள் யாரிடமும் சொல்ல மாட்டாள் நீங்களும் மாட்டிக் கொள்ள மாட்டீர்கள் .... என்ன ஒரு சதி வேலை .... 🤨

அசோக் : டேய் .... நானும் ஒப்புக் கொள்கிறேன் . நான் சொன்னது எல்லாம் பொய் தான் . அதனால் என்ன இப்பொழுது .... முதலில் சிறிது யோசி கிருஷ்ணா ... எனக்கு என் மகா சிரிக்க வேண்டும் , அதற்கு நான் என்ன வேண்டுமானாலும் செய்வேன் ... இப்பொழுது ஒரு பொய்யான கிரீடத்தை அவளுக்கு சூட்டினேன் ... அதனால் என்ன மாறி விட்டது இப்பொழுது .... அவள் எப்பொழுதும் அவள் அப்பாவின் பரிசை இழக்க விரும்ப மாட்டாள் ... அதனால் அழவும் மாட்டாள் .... அப்படி ஒரு சூழல் வந்தாலும் தன்னைத் தானே தேற்றிக் கொள்வாள் . அவள் இளவரசி 👸 🧚 அவள் சிரிப்பு ஒன்றுதான் எனக்கு வேண்டும் .. 😀 பிறகு தனு பற்றி நான் கூறியது ஒன்றும் பொய்யில்லையே ... எல்லோர் மீதும் அன்பு காட்டுவது தனுவின் ... இயல்பு , அது உனக்கும் தெரியும் . மேலும் மகாவும் இப்பொழுது தன் அம்மாவை புரிந்து கொண்டாள் . இனி தனு விடம் சண்டை போட நிச்சயம் யோசிப்பாள் . விட்டுக் கொடுக்கவும் செய்வாள் ... உண்மைதான் நான் சத்தியம் வாங்கினேன் . ஆனால் அதற்காக அவள் இதை வெளியில் சொல்லாமல் இருப்பாளா என்று எனக்கு தெரியாது .... ஆனால் நிச்சயம் அவளுடைய நண்பர்கள் வேதனை படக் கூடாது என்பதற்காக சொல்லாமல் இருப்பாள் . இதைவிட நல்ல விஷயம் என்ன இருக்க முடியும் . என்னுடைய வார்த்தைகள் எல்லாம் பொய் தான் .... ஆனால் என் எந்த வார்த்தையும் மகா குட்டியின் வாழ்க்கையை மாற்றப் போவதும் இல்லை , ... வீணாக்கப் போவதும் இல்லை ..... அதை நான் நிச்சயமாக கூறுவேன் கிருஷ்ணா ....
( கிருஷ்ணாவால் எதுவும் பேச இயலவில்லை 😐 )
அசோக் : ஆனால் கிருஷ்ணா .... நீ இதையும் நினைவில் வைத்துக்கொள் ... இப்பொழுது மகா உன் மீது கோபமாக 😡உள்ளாள் . நாளை உங்களை சேர்த்து வைக்கவும் நான்தான் கதை கூற வேண்டும் 😅 🤣 😉 🙃 🤭 ...... அதனால் என்னிடம் கொஞ்சம் யோசித்து பேசு ..... 😅 ( எனக் கூறிவிட்டு சிரிக்கிறான் 😀 )
கிருஷ்ணா : ஆஹா .... இப்படி சொல்லி சமாளித்து விட்டீர்களா ..... அருமை அருமை ( உண்மையில் சமாளிப்பது யார் என தெரிந்தும் 😅 🤭 😅 )
கிருஷ்ணாவிற்கு தன் அண்ணனை பற்றி நன்றாக தெரியும் ..... 😀 அவர் இந்த குடும்பத்தை எந்த அளவிற்கு நேசிக்கிறார் 😍 💕 என்பதும் தெரியும் .... ஆனால் அவன் தன் அண்ணனை கேலி செய்யும் பணியை தொடர்ந்து கொண்டு தான் இருப்பான் 😅 🤣 . என்ன இருந்தாலும் அது உடன்பிறந்தவர்களின் உரிமை தானே 😃 😉 🙃 😅 .

**************** The End ***************

## Writer’s Word

எல்லோரும் எப்படி இருக்கிறீர்கள் ? எனக்கு தெரியும் நிச்சயம் நன்றாக தான் இருப்பீர்கள் . நான் என்னால் முடிந்த அளவிற்கு எல்லா உணர்வுகளையும் ( கோபம் ,சிரிப்பு, மகிழ்ச்சி , எதிர்பார்ப்பு , கேலி ) என அனைத்தையும் இக்கதையில்

கொண்டு வர முயற்சி செய்திருக்கிறேன். எனக்கு நன்றாக தெரியும் இந்த கதையின் தலைப்பை கேட்டதும் பலருக்கு என் மேல் கோபம் தான் வந்திருக்கும். ஏனெனில் அப்பாவை பிடிக்காதவர்கள் இந்த உலகத்தில் இருக்க முடியாது. ஆனால் என் கருத்தை ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகிறேன். அப்பாக்கள் எப்பொழுதும் அப்படித்தான் தன் குடும்பம் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக என்ன வேண்டுமானாலும் செய்வார்கள். தன் மனைவி மற்றும் குழந்தைகள் முகத்தில் சிரிப்பைக் காண பொய் சொல்வது மட்டுமல்ல, எந்த எல்லைக்கும் செல்வார்கள்.... எதை வேண்டுமானாலும் செய்வார்கள்..... பல சமயங்களில் தங்களை தாழ்த்தி கொள்வார்கள்.... தன் குழந்தை வாழ்வில் உச்சத்தை தொட படிக்கட்டாக அமைவதும் நம் பெற்றோர்களே..... அவர்கள் நமக்காகத்தான் வாழ்கிறார்கள் . நமக்கு தேவைப்படும் அனைத்தையும் செய்கிறார்கள் அது அவர்கள் சக்திக்கு மீறியதாக இருந்தாலும் சரி .... ஆனால் நாம் அவர்களை புரிந்து கொள்வதே இல்லை. மகன் அல்லது மகளாக இருக்கும் நாம் அவர்களை வாழ்வில் உயர்த்த வேண்டும்....
ஆனால் குறைந்தபட்சம் தாழ்த்தாமல் இருக்க முயற்சி செய்வோம்
ஒரு வழியாக நான் இந்த கதைக்கு முற்றுப் புள்ளி வைத்து விட்டேன். உங்கள் மனநிலை பற்றி எனக்கு தெரியவில்லை. ஆனால் என் மனநிலை மிகவும் மோசம். ஏனெனில் பல விஷயங்கள் நடந்து விட்டது. பலரது கருத்து என்னவெனில் இந்த காலத்தில் காதல் கதைக்குத்தான் மதிப்பு. அப்பா , அம்மா பாசம் , அவர்களின் காதல் அதற்கு எல்லாம் எந்த மதிப்பும் இருக்காது என்று. நான் அதை ஒப்புக் கொள்ள வில்லை. ஆனால் ....
நீங்க சொல்லுங்க....
உங்களுடைய எண்ணங்களை ... அப்பொழுது தான் , என்னால் அந்த சிலருக்கு உண்மையை புரிய வைக்க முடியும். அப்பா , அம்மாவின் காதலும் உயர்ந்தது தான் என்று.
உங்கள் கருத்துகளை நோக்கி காத்திருக்கும்.....
உங்கள் அன்பு தோழி.